# தொழில்நுட்பக் கல்வித் துறை

**அனுப்புநர்**

தேர்வு வாரியத் தலைவர்,
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை – 600 025

**பெறுநர்**

முதல்வர்கள்,
அனைத்து அரசு / அரசு உதவி பெறும்
மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரி

**கடித எண்.100008/எம்1/2024** **நாள் 19.01.2024**

ஐயா / அம்மையீர்,

பொருள்: தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – தேர்வுப் பிரிவு – பட்டயத் தேர்வுகள் அக்டோபர் 2023 – மாணாக்கர்களின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்தல் – தொடர்பாக.

பார்வை: (1) அரசாணை (நிலை) எண்.244 உயர் கல்வித் (பி1)துறை, நாள் 31.07.2001.
(2) அரசுக் கடித எண்.8860/பி/2002-1, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 09.07.2002.

*****

பார்வை-(1) மற்றும் (2)-இல் காணும் அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தில் பட்டயத் தேர்வுகளின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அக்டோபர் 2023 பட்டயத் தேர்வுகளுக்கான முடிவுகள் 19.01.2024 அன்று வெளியிடப்பட உள்ள நிலையில், கீழ்க்கண்ட அட்டவணைப்படி அக்டோபர் 2023 பட்டயத் தேர்வுகளின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்து முடிவுகளை வெளியிட அந்தந்த கல்லூரி முதல்வர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அச்சுப்பகர்ப்பு நகல் மற்றும் மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிப்பதற்கான கால அட்டவணை

| | | |
|---|---|---|
| பட்டயத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாள் | : | 19.01.2024 வெள்ளி |
| மறுமதிப்பீட்டிற்காக அச்சுப்பகர்ப்பு நகல் (Scan Copy) பெறுவதற்காக விண்ணப்பிக்க ஆரம்ப நாள் (விண்ணப்பக் கட்டணம் ரூ.100/-) | : | 19.01.2024 வெள்ளி |
| அச்சுப்பகர்ப்பு நகல் (Scan Copy) பெறுவதற்காக விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 23.01.2024 செவ்வாய் மாலை 5.30 வரை |
| மதிப்பீட்டு மையங்களில் இருந்து அசல் விடைத்தாள்களை பெறுவதற்காக தகவல் அனுப்பும் நாள் | : | 19.01.2024 வெள்ளி முதல் 23.01.2024 செவ்வாய் மாலை 5.30 வரை |

| | | |
|---|---|---|
| விடைத்தாள்களை மதிப்பீட்டு மையங்களில் இருந்து தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் நேரடியாகப் பெறப்படும் நாள் | : | 29.01.2024 திங்கள் மற்றும் 30.01.2024 செவ்வாய் |
| விடைத்தாள்கள் Scan செய்யப்படும் நாள் | : | 05.02.2024 திங்கள் முதல் 09.02.2024 வெள்ளி வரை |
| அச்சுப்பகர்ப்பு நகல் Scanned Copies பதிவேற்றம் செய்யப்படும் நாள் | : | 12.02.2024 திங்கள் |
| மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்க ஆரம்ப நாள்(விண்ணப்பக் கட்டணம் ரூ.400/-) | : | 12.02.2024 திங்கள் |
| மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 16.02.2024 வெள்ளி மாலை 5.30 வரை |
| விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்தல் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை வட்டார அலுவலர்–III பிரிவிலிருந்து கணினி பிரிவிற்கு அனுப்பும் நாள் | : | 22.02.2024 வியாழன் மற்றும் 23.02.2024 வெள்ளி |
| மதிப்பெண் பட்டியல்களை அடுத்தகட்ட நடவடிக்கைக்காக கணினி பிரிவிலிருந்து வட்டார அலுவலர்–III பிரிவிற்கு அனுப்பும் நாள் | : | 26.02.2024 திங்கள் |
| சரிபார்க்கப்பட்ட மதிப்பெண் பட்டியல்களை வட்டார அலுவலர்-III பிரிவிலிருந்து கணினி பிரிவிற்கு அனுப்பும் நாள் | : | 27.02.2024 செவ்வாய் |
| தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் | : | 28.02.2024 புதன் |

அச்சுப் பகர்ப்பு நகல் பெறுதல் மற்றும் மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்கும் மாணாக்கர்கள் https://dipexamstndte.in என்ற இணையதள பக்கத்தில், இணைய வழியில் மட்டும் மாணாக்கர்களே நேரடியாக விண்ணப்பித்து அதற்கான கட்டணத்தினை இணைய வழியில் செலுத்த மாணாக்கர்களை அறிவுறுத்துமாறு முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–

தேர்வு வாரியத் தலைவர்

நகல் 1) கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)(மு.கூ.பொ.),
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.

2) வட்டார அலுவலர் IV,
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.

3) தொழில்நுட்ப உதவியாளர் (மதிப்பீடு – I).
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.

4) தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்),
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.